[1972 மார்ச் 3

திரு. சோ. அழகர்சாமி : அந்தத் திட்டத்தை எந்த முறையில் கொண்டு வருவது என்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது? இப்போது பெரும்பகுதி நிலங்கள் வீட்டு மனையாக வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த மனைகளை ஈடாக வைத்துக் கொண்டு நகரங்களில் கடன் கொடுப்பது போன்று கிராமப் புறங்களிலும் எல்.ஐ.சி. கடனைப் பெற்றோ அல்லது பாங்குகளின் மூலமாகவோ கூட்டுறவு முறையில் பணம் கொடுக்க அரசு சீக்கிரத்தில் முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்.ஐ.சி. கடன் உதவி பெற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதுதான் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அமலுக்கு வரும்.

மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை

* 283 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரம் மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் 1970-க்குப் பின்னால் எத்தனை பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாயூரம் தாலுக்கா மணல் மேட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் 31—12—1970க்குப் பின்னால் 11 தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் இதில் 10 பேர்கள் மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டார்கள்.

Vanaspathi factory

* 284 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a vanaspathi factory in the State; and

(*b*) if so, the details of the same?